# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 68/2016 | **CNR No.** | : | TNKI13-000713-2016 |
| **Name** | : | தனபதி | **Father's Name** | : | சின்னதம்பி |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 50 | **Village** | : | ஒட்டம்பட்டி |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 12 :19 PMs | **End Time** | : | 12:50PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 13.02.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

(1) நான் யாரிடம் இருந்து நிலம் வாங்கினேன் என்றால் எனது அண்ணன் கோவிந்தசாமியிடம் இருந்தது நிலம் வாங்கினேன். எந்த வருடம் வாங்கியேன் என்றால் வருடம் தெரியாது, தற்போது 2002 ல் என்று சாட்சியம் அளிக்கிறார். 2002 ல் வாங்கிய சர்வே எண் என்னவென்றால் 63 ஆகும். 2002 ம் ஆண்டு கோவிந்தசாமிக்கு தான் கிரைய சொத்து பாத்தியம் என்று காட்ட ஆவணங்கள் ஒப்படைத்துள்ளேனா என்றால் எனது அப்பா சொத்தாகும். எனது அண்ணன் பெயரில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.

(2) 2002 ம் ஆண்டு கிரைய பத்திரத்தில் கோவிந்தசாமி மற்றும் அவரது வாரிசுகளுக்கு வழிமுறையாக பாத்தியம் மற்றும் அனுபவம் என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த சொத்து எனது அப்பாவிற்கு

சொந்தமானதாகும் அதனால் அந்த சொத்தில் எனக்கும் எனது அண்ணன் கோவிந்தசாமிக்கும் உரிமை உள்ளது. 2002 ஆண்டு கிரைய ஆவணம் வா.சா.ஆ.3 ஏற்படும் போது வழக்கு சொத்தானது சர்வே எண்.63/3 ஏ, 63/3 பி என்று இருந்து வந்து அதனை மறைத்து இந்த கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(3) 1987 ம் ஆண்டு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் சர்வே எண். 63/3 என்பது சர்வே எண். 63/3 ஏ, மற்றும் 63/3 பி என்று உட்பிரிவு ஆகி சர்வே எண் 63/3 ஏ விற்கு பட்டா எண் 100 சின்னதம்பி மற்றும் மொல்லன் என்பவர் பெயரில் 1.18.0 ஹெக்டேர் விஸ்த்தீரணத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண். 63/3 பி 0.09.5 ஹெக்டேர் விஸ்த்தீரணத்திற்கு பட்டா எண் 36 என ஐ குழந்தை கவுண்டர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.63/3 பி ஐ குழந்தை கவுண்டருக்கு வழங்கப்பட்ட பாக சொத்து என்றும் அதனை அனுசரித்து தான் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் உட்பிரிவு செய்து அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(4) நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பே வாய்மொழி பாக பிரிவினை ஏற்பட்டு சர்வே எண்.63/3 பி சொத்தை குழைந்தை கவுண்டர் தான் தனது பாக சொத்தாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, நான் தான் அனுபவித்து வருகிறேன். 1987 வருமே உட்பிரிவாகி தனிதனியாக பட்டா ஏற்பட்டுள்ள நிலையில் வா.சா.ஆ.1 02.05.1991 ம் தேதி உட்பிரிவு ஆகாமல் இருப்பதாக தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 02.05.1991 ம் தேதி மற்றும் அதற்கு முன்பே வருவாய் துறை ஆவணங்கள் சர்வே எண்.63/3

என்பது சர்வே எண். 63/3 ஏ மற்றும் சர்வே எண். 63/3 பி ஆக இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பு ஆவணம் 2 காண்பிக்கப்பட்டு, 1987 ம் ஆண்டிற்கான அ பதிவேடில் சர்வே எண். 63/3 ஏ மற்றும் சர்வே எண். 63/3 பி என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5 காண்பிக்கப்பட்டு, 63/3 ஏ சொத்திற்கு தான் பட்டா எண்.100 வழங்கப்பட்டுள்ளது என்றால் நிலம் குறைவாக உள்ளதால் தான் அதனை தாக்கல் செய்து வழக்கு தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ரிலேயே சர்வே எண்.63/3 ஏ மற்றும் சர்வே எண். 63/3 பி என உட்பிரிவு செய்து காட்டப்பட்டுள்ள புல வரைபடம் தான் என்றும் இது 1987 ம் அண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்குரையில் சர்வே எண். 63/3 ஏ மற்றும் 63/3 பி தனி தனி விஸ்த்தீரணம் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த போது சர்வே எண்.63/3 ஏ மற்றும் பி என உட்பிரிவு ஆகிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்குரையில் 63/3 ஏ மற்றும் 3 பி என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதன் உடைய விஸ்த்தீரணங்கள் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(5) எனது அப்பா சின்னதம்பிக்கு சர்வே எண். 63/3 முழுவதும் பாத்தியப்பட்டது என்று காட்டுவதற்கு நான் தயாரித்து தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 ஆவணத்தை தவிர வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவி பேரில் 1998 ம் ஆண்டு வா.சா.ஆ.2 ஆவணத்தை உட்பிரிவான விவரம் மறைத்து கிரையம் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2,3 ஆவணங்கள்

உட்பிரிவுளை மறைத்து அதிகபடியான விஸ்த்திரணத்திற்கு குழந்தை கவுண்டர் சொத்தை ஏமாற்ற வேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் 1991 ம் ஆண்டு ஆகும்.

(6) தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்று குழந்தை கவுண்டர் சொத்தை ஏமாற்ற வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 63/3 பி சொத்து எந்த காலத்திலும் எனது தந்தை சின்னதம்பிக்கோ அல்லது எனது அண்ணன் கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டு, உரிமை அனுபவம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சின்னதம்பி பெயரில் அவரது அனுபவம் மற்றும் சுவாதீனத்தை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 வரி ரசீதுகள் உட்பிரிவான 1.18.0 ஹேக்டேர் நிலத்தின் பட்டா எண்.100 க்கு தான் செலுத்தப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

(7) வா.சா.ஆ.13,14,15 ஆகியவை வருவாய் துறை ஆவணங்கள் இல்லாமல் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 63/3 பி குழந்தை கவுண்டர் உயிருடன் இருந்த பொழுது அனுபவித்து வந்தார் என்றும் அவர் இறந்த பிறகு 26.11.2022 தேதியில் சர்வே எண். 63/3 பில் நான் தென்னை மரங்களை சேதப்படுத்தியதாக என் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம், அது ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண். 32/2023 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ( **ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண். 32/2023 முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க**

நகல் – பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) அதன் பேரில் புலன் விசாரனை செய்து என் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து அது ஊத்தங்கரை குற்றவியல் நீதி மன்றத்தில் STC No. 452/2023 என நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். பொய்யாக வழக்கு தாக்கல் செய்து எனக்கு உரிமை மற்றும் பாத்தியம் இல்லாத சொத்து வேண்டும் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருவதால் நஷ்ட ஈடு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 63/3 என எப்பொழுது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது, ஆனால் எனது அப்பா பெயரில் உட்பிரிவு ஆகியுள்ளது.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai